# **Sub Court, Eraniel**

O.S. No.55/2024
Date:11.03.2026.
PW1 - திருமதி. விஜயகுமாரி

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

C பட்டிகை சொத்து சம்பந்தமாக அளப்பதற்கு நான் தாசில் தாரிடம் மனு கொடுத்திருந்தேன் என்றால், சரிதான். அதன் படி சொத்தினை அளந்து C பட்டிகை சொத்து அரசுடையது என்று சொல்லப்பட்டது என்றால், அரசு உடையது கிடையாது என்னுடையது. நான் 3 மற்றும் 4ம் பிரதிவாதிகளுக்கு எதிராக குறிப்பிட்டு நான் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால், சரியல்ல. எனவே 3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் தேவையற்ற தரப்பினர் என்றால், சரியல்ல. நான் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த CR.L.OP.MD.No.17195/2014ல், 3 மற்றும் 4 ம் பிரதிவாதிகளை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால், சரிதான். இந்த வழக்கின் வா.சா.ஆ.8 மற்றும் 9 ஆகிய தானப்பத்திரங்கள் உண்மையாக பதிவு செய்யப்பட்ட ஏற்புடைய ஆவணங்கள் என்றால், சரியல்ல. இந்த நிலையில் அரசுக்கு எதிராக நான் எந்த நிவாரணமும் கோர முடியாது என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.